# கொரோனா களம் காணும் போராளிகள்

*சிங்கப்பூரில் கொரோனோ கிருமி பாதிப்பு அதிகம் இருந்தாலும் மரண அளவு உலகமே வியக்கும் அளவில் மிகவும் குறைவாக இருக்கிறது. இதற்கு குறிப்பாக, மருத்துவத் துறையினரின் அரும்பாடுகளே முக்கிய காரணமாக இருக்கிறது. நோயாளிகள் விரைவில் குணமடையவும் அதிகமானோர் கிருமித்தொற்றிலிருந்து விடுபடவும் இவர்கள் இடைவிடாது சேவையாற்றி வருகின்றனர்.*

## ‘ரேடியோகிராஃபர்’ சுரேந்தரின் பணி

கி.ஜனார்த்தனன்

நோயாளிக்கு கொரோனா கிருமித் தொற்றா அல்லது நிமோனியா போன்ற வேறு ஏதேனும் பிரச்சினையா, கிருமித் தாக்கம் எந்த நிலையில் இருக்கிறது என்பதையெல்லாம் நுரையீரலை ஊடுகதிர் (எக்ஸ்ரே) படம் எடுத்து ஆய்வு செய்பவர், டான் டோக் செங் மருத்துவமனையின் தலைமை கதிர்ப்பட பதிவாளரான (Radiographer) திரு சுரேந்தர் ரெட்டி.

“சார்ஸ், இபோலா, கொவிட்-19 போன்ற நோய்த்தொற்றுக்கான பரிசோதனையின்போது ‘எக்ஸ்-ரே’, ‘சிடி ஸ்கேன்’ போன்றவற்றின் வழியாக நுரையீரல் முக்கியமாக கவனிக்கப்படுகிறது,” என்று அவர் தெரிவித்தார்.

கடந்த 26 ஆண்டுகளாக இங்கு பணியாற்றும் 56 வயது திரு சுரேந்தர், மெமோகிராம், அல்ட்ராசவுண்ட், எம்ஆர்ஐ, எஞ்சியோகிராஃபி உள்ளிட்ட முறைகளின் வழியாகவும் நுரையீரலைப் படம் எடுத்து ஆய்வுக்கு அனுப்புவார்.

‘எக்ஸ்ரே’ படங்களை நோயாளிகள் படபடப்பு இன்றி நிதானமாக இருக்கும்போதுதான் சரியாக எடுக்க முடியும் என்பதால் அவர்களை அமைதிப்படுத்தும் பொறுப்பு கதிர்ப்பட பதிவாளர்களுக்கு இருப்பதாக திரு சுரேந்தர் கூறினார்.

கொரோனா கிருமித்தொற்றுக்கான மருத்துவமனையின் பிரத்யேக சோதனை நிலையத்தில் இவரது பிரிவு 24 மணி நேர சேவையில் ஈடுபட்டுள்ளது.

சார்ஸ் நோய்ப்பரவலின்போது சோதனைகளுக்காக திறந்தவெளிக் கூடாரங்கள் அமைக்கப்பட்டிருந்ததை நினைவுகூர்ந்த திரு சுரேந்தர், தற்போதுள்ள தேசிய தொற்றுநோய் சிகிச்சை நிலையத்தில் கொரோனா கிருமிப்பரவலை எதிர்கொள்வதற்கான தொழில்நுட்ப வசதியும் தயார்நிலையும் மேம்பட்ட நிலையில் இருப்பதாகக் கூறினார்.

“மின்னிலக்கத் தொழில்நுட்பத்தால் கதிர்ப்படங்களுக்கான அறிக்கையைத் தயாரிக்கும் நேரம் குறைந்துள்ளது. தொலைவிலிருந்தும் மின்னிலக்க பகிர்வு வசதி மூலம் இந்தப் படங்களைக் கண்டு அறிக்கையை மருத்துவர்களுக்காகத் தயாரிக்கலாம். முக்கியமான முடிவுகளை விரைவில் பெறுவதற்கு இது வகை செய்கிறது,” என்றார் திரு சுரேந்தர் ரெட்டி.

வீட்டில் மனைவி, பிள்ளைகளுடன் வயதான மாமியார், மாமனாருடன் தங்குவதால் சில நேரங்களில் மனதில் ஒருவித கவலை உறுத்துவதாகக் கூறிய திரு சுரேந்தர், கொவிட்-19 பரவத் தொடங்கியது முதல் பல்லாயிரக்கணக்கான ‘ஸ்கேன்கள்’ செய்யப்பட்டிருப்பதைச் சுட்டினார்.

பின்பற்றப்படும் பாதுகாப்பு நடவடிக்கைகளால் தமது கதிரியக்கவியல் பிரிவில் எவருக்கும் கிருமித்தொற்று ஏற்படவில்லை என்பது இவருக்கு ஆறுதலான விஷயம்.



சுரேந்தர் ரெட்டி **படம்: டான் டோக் செங் மருத்துவமனை**

## தொற்றுநோய்த் தடுப்பு வழிகாட்டி பத்மாவதி

கடந்த 2003ல் சிங்கப்பூரை உலுக்கிய சார்ஸ் நோயை ஒழிப்பதில் தாதியாகப் பணியாற்றிய திருமதி பத்மாவதி கிருஷ்ணன், தற்போது கொவிட்-19 ஒழிப்பில் பணியாற்றும் தாதியரை வழிநடத்துகிறார்.

தேசிய தொற்றுநோய் சிகிச்சை நிலையத்தின் (என்சிஐடி) உதவி தாதிமை இயக்குநரான 62 வயது திரு பத்மாவதி, பல்வேறு வெளிநாட்டு மருத்துவமனைகளிலிருந்தும் வெளிநாட்டு நிபுணர்களுடனான கூட்டுத் திட்டங்களிலிருந்தும் சிறந்த வழிமுறைகளைக் கற்று அவரது நிர்வாகத்திலுள்ள பணியார்களுக்குக் கற்பித்துள்ளார்

பணியாளர்கள், நோயாளிகள், மருத்துவமனைக் கருவிகள் ஆகியவற்றின் நகர்வைக் கண்காணிக்கும் அட்டைகளைப் (tag) பயன்படுத்தும் ‘ரியல் டைம் லொகேஷன்’ கட்டமைப்பை அவர் செயல்படுத்தியுள்ளார். “பணியாளர்கள் நன்கு கைகளைச் சுத்தம் செய்ய நினைவூட்டுவதுடன் கொவிட்-19 நோயாளிகளைச் சுற்றி உள்ளவர்களைக் கண்காணிக்கவும் இவை உதவுகின்றன,” என்றார் அவர்.

பாதுகாப்பு அங்கிகளை அணிவதற்கான படிமுறைகளை சுவரொட்டிகளாக உருவாக்கியுள்ள இவர், தாதியர்களை அடிக்கடி சந்தித்து பாதுகாப்பு ஆலோசனைகளையும் வழங்குகிறார்.

> “கொரோனா கிருமியின் அதிவேக பரவலும் முதியோருக்கு ஏற்படக்கூடிய கூடுதல் அபாயமும் மருத்துவப் பணியாளர்கள் எதிர்கொள்ளும் புதிய சவால்கள். எனினும், கிருமித்தொற்றைச் சமாளிப்பதில் புதிய தொழில்நுட்பம் பெருமளவு கைகொடுக்கிறது.
>
> **திருமதி பத்மாவதி கிருஷ்ணன்**

“பிறருக்கு நோய்த்தொற்று பரவாத வண்ணம் நோயாளிகளை ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு மாற்றுவது, மரணம் ஏற்பட்டால் உடல்களை உரிய இடத்திற்குப் பாதுகாப்பாக கொண்டு செல்வது போன்றவற்றுக்காக மருத்துவ உதவியாளர்கள் முறையான பயிற்சியை மேற்கொண்டனர். இளம் பிள்ளைகள், கர்ப்பிணிகளைப் பராமரிக்கவும் தொற்றுநோய் நிலையத்தின் தாதியர் பயிற்சி பெற்றுள்ளனர்,” என்று அவர் கூறினார்.

சார்ஸ் நோய்ப்பரவல் காலத்தைக் காட்டிலும் தனிமைப்படுத்தும் அறைகள், எதிர்மறை அழுத்த அறைகள் போன்ற வசதிகள் தற்போது என்சிஐடி நிலையத்தில் உள்ளதால் நோய்க்கட்டுப்பாட்டு முறை மேம்பட்டுள்ளது. எதிர்மறை அழுத்த அறைகளில் (negative pressure room) காற்று மேல் திசையில் இழுக்கப்பட்டு தொடர்ந்து சுழற்சி செய்யப்படுகிறது. அத்தகைய அறைகளுக்குச் செல்லும் மருத்துவப் பணியாளர்கள் பாதுகாப்பு அங்கிகளை அணியத் தேவை இருக்காது,” என விளக்கினார் 17 வயதிலிருந்து தாதிமை பணியில் ஈடுபட்டு வரும் திருமதி பத்மாவதி.

கடந்த 1979ல் டான் டோக் செங் மருத்துவமனையில் பணிபுரியத் தொடங்கி அவர், 2018ல் அமைக்கப்பட்ட தொற்றுநோய் நிலையத்தின் வடிவமைப்பின் திட்டமிடலுக்காகப் பெரும் பங்காற்றியுள்ளார். முன்னதாக மோல்மின் ரோட்டிலுள்ள சிடிசியின் நிர்வாகத்தில் ஈடுபட்டிருந்த அவர், 2018ல் என்சிஐடி தொற்றுநோய் நிலையத்திற்கு மாறினார்.

சார்ஸ் நோய்ப்பரவலின்போது மூன்று பிள்ளைகளும் இளையர்களாக இருந்ததால் வீடு திரும்பும்போது மிகுந்த எச்சரிக்கையுடன் நடந்துகொள்வார் திருமதி பத்மாவதி. இப்போது, மணமாக மூத்த பிள்ளைகள் இருவரும் தத்தம் வீடுகளில் வசிக்கின்றனர். டான் டோக் செங் மருத்துவமனையில் நோயாளி தகவல் பணியாளராக பணியாற்றும் கணவர், இளைய மகள வசிக்கும் திருமதி பத்மாவதி, இப்போது அந்தளவு பதற்றமில்லை என்றார் சிரித்துக்கொண்டே.

**-கி.ஜனார்த்தனன்**



தாதி ஒருவருக்கு அன்றைய பணி குறித்து விளக்கம் அளிக்கும் தாதி பத்மாவதி.

**படம்: டான் டோக் செங் மருத்துவமனை**



இதய சிகிச்சை நிபுணர் இணைப் பேராசிரியர் டாக்டர் ரா. ராமநாதன். **படம்: என்யுஎச்எஸ்**

## சுவாச சிகிச்சை தரும் டாக்டர் ராமநாதன்

ப. பாலசுப்பிரமணியம்

கொவிட்-19 கிருமித்தொற்றால் பாதிகப்பட்ட சிங்கப்பூரரான 54 வயது திரு தோ காய் கியாட், 42 நாட்கள் இரு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று மரணத்தின் விளிம்பிலிருந்து தப்பியவர்.

வேலை காரணமாக பேங்காக் சென்று வந்த திரு தோவுக்கு காய்ச்சல் பல நாட்கள் நீடித்ததால் கூ டெக் புவாட் மருத்துவமனையில் மார்ச் 12ஆம் தேதி அனுமதிக்கப்பட்டார். கொரோனா கிருமித் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட அவருக்கு ரத்தத்தில் உயிர்வளி (ஆக்சிஜன்) அளவும் ரத்த அழுத்தமும் குறையத் தொடங்கின.

கடுமையாகப் பாதிக்கப்பட்ட அவரது நுரையீரலை பல்வேறு சிகிச்சைகளிலும் சரிப்படுத்த முடியாத நிலையில், ‘எக்மோ’ (Extracorporeal Membrane Oxygenation life support- ECMO) சிகிச்சை வழங்க முடிவானது.

மருத்துவமனையின் மூத்த மருத்துவர் இணைப் பேராசிரியர் டாக்டர் கொல்லங்கோடு ரா. ராமநாதன் தலைமையிலான மருத்துவக் குழு மார்ச் 17ஆம் தேதி கூ டெக் புவாட் மருத்துவமனைக்கு வந்து திரு தோவுக்கு ‘எக்மோ’ சிகிச்சையை மேற்கொண்டது.

இந்த சிகிச்சை முறையில் ‘எக்மோ’ உயிர்க்காப்பு இயந்திரம், செயற்கை நுரையீரலாகச் செயல்படும். உடலில் பொருத்தப்படும் குழாய் மூலம் உடலிலுள்ள ரத்தம் வெளியில் எடுக்கப்பட்டு, உயிர்வளி சேர்க்கப்பட்டு மீண்டும் உடலுக்குள் செலுத்தப்படும். நுரையீரல் சீராகும் வரை சிகிச்சை நீடிக்கும்.

சிகிச்சையின் தொடக்கத்தில், திரு தோவுக்கு மாரடைப்பு ஏற்பட்டது. ஒருபுறம் கூ டெக் புவாட் மருத்துவர்கள் இதய இயக்க மீட்பு சிகிச்சையை (CPR) மேற்கொள்ள, மறுபுறம் ரா. ராமநாதன் குழுவினர், திரு தோவின் நுரையீரலுடன் இதயத்திற்கும் ஆதரவு வழங்கும் வகையில் ‘எக்மோ’ இயந்திரத்தின் செயல்பாட்டை மாற்றி அமைத்தனர்.

உடல்நிலை சற்று சீரானதும் அதேநாளில் அவர் தேசிய பல்கலைக்கழக மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். அங்கு ஏழு நாள் ‘எக்மோ’ சிகிச்சையில் அவரது நுரையீரல் சீர்பெற்றது.



பழைய நிலைக்குத் தேறி வரும் திரு தோ காய் கியாட்.
**படம்: சாவ் பாவ்**

முழுமையாகக் குணமடைந்த திரு தோ, ஏப்ரல் 22ஆம் தேதி வீடு திரும்பினார்.

“நான் ஆரோக்கியமாக, துடிப்பான வாழ்க்கைமுறையைப் பின்பற்றுபவன். எனக்கே கிருமித் தொற்று ஏற்பட்டு, கடுமையாகப் பாதித்துவிட்டது. அதனால் தெரிந்தவர்களிடம் எல்லாம் மிகக் கவனமாக இருக்கும்படி வலியுறுத்துகிறேன். உயிர்பிழைத்தது பெரும்பாடு,” என்றார் திரு தோ.

“இந்த ‘எக்மோ’ சிகிச்சைமுறை சிக்கலானது, சவால்மிக்கது. இயந்திரத்தின் செயல்பாட்டையும் நோயாளியின் உடல்நலத்தையும் சிகிச்சை முடியும் வரை கூர்ந்து கவனிக்க வேண்டும். நோயாளியின் ஒட்டுமொத்த பராமரிப்பில் கிட்டத்தட்ட 50 மருத்துவ ஊழியர்களின் பங்கும் அடங்கியிருக்கிறது,” எனத் தெரிவித்தார் இதய தீவிர சிகிச்சை நிபுணரான டாக்டர் ராமநாதன்.

“எக்மோ சிகிச்சையில் அதிக அபாயம் உள்ளது. இந்த சிகிச்சையை அனுபவம் வாய்ந்த நிலையங்களில் மேற்கொள்வதே உகந்தது என்று உலக சுகாதார நிறுவனம் பரிந்துரைக்கிறது,” என்றார் தேசிய பல்கலைக்கழக மருத்துவமனை இதய தீவிர சிகிச்சை பிரிவின் இயக்குநர் இணைப் பேராசிரியர் கிரெம் மெக்கிரைவுன்.

தேசிய பல்கலைக்கழக மருத்துவமனையிலும் சிங்கப்பூர் பொது மருத்துவமனையிலும் மட்டுமே ‘எக்மோ’ சிகிச்சை வசதி உள்ளது.

## தமிழ்செல்வியின் தாதிமைத் தொண்டு



திருவாட்டி தமிழ்செல்வி **படம்: தமிழ் செல்வி**

எஸ்.வெங்கடேஷ்வரன்

கடந்த 36 ஆண்டுகளாக தாதியராகவும் தற்போது முதியோர் இல்லத்தில் தாதியர் நிர்வாகியாகவும் பணியாற்றி வரும் 54 வயது திருவாட்டி தமிழ்செல்வி, தாம் பணியாற்றும் இல்லத்தில் உள்ள முதியவர்களுடன் குடும்ப உறுப்பினரைப் போல பழகுவார்.

கொரோனா கிருமி பரவல் காரணமாக அவர்களுக்கு அருகில் சென்று நெருக்கமாகப் பேசுவதைக் குறைத்துக் கொண்டுள்ளது பற்றிக் குறிப்பிட்ட அவர், “நான் பணியாற்றும் இல்லத்தில் அனைவருக்கும் கொரோனா பரிசோதனை நடத்தப்பட்டது. அனைவரும் ஆரோக்கியமாக இருக்கிறார்கள். இருந்தாலும் பாதுகாப்பு வழிமுறைகளை கடுமையாகக் கடைப்பிடித்து வருகிறோம். வயதானவர்கள் என்பதால் அதிக கவனம் செலுத்தவேண்டும்,” என்றார்.

“கிருமிப் பரவல் தடுப்பு கட்டுப்பாடுகள் காரணமாக குடும்பத்தினர் இல்லத்துக்கு வரமுடியாது என்பதால் இல்லவாசிகளுக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கும் தாதிகளே தொடர்புப் பாலமாக உள்ளனர். சில நேரங்களில் குடும்பத்தினருக்கு நிலைமையை எடுத்துச் சொல்வது, குறிப்பாக இறப்பு ஏற்படும் சமயங்களில் சவாலாக இருக்கும்,” என்றார் அவர்.

எப்போதும் முகக்கவசம், கையுறை, நீளங்கி ஆகிய பாதுகாப்பு அம்சங்களை அணிந்திருக்கும் இவர், சொந்த காரில் வீட்டுக்கும் வேலையிடத்துக்கும் மட்டுமே பயணம் செய்கிறார்.

“சிலர் குடும்பங்களால் ஒதுக்கப்பட்டுவிட்டனர். உடலளவில் ஆரோக்கியமாக இருந்தாலும் மனதளவில் அவர்களுக்கு மகிழ்ச்சி தருவது, நம்மைப் போன்ற தாதியர்களின் அன்பும் பாசமும்தான். சிலர் என்னிடம் தங்களின் மகள்போல அன்பு காட்டுவார்கள். அவர்களுக்கு உணவு கொடுத்தால், நான் சாப்பிட்டு விட்டேனா என்று கேட்பார்கள். சில நேரம் எனக்கு அவர்களின் உணவை வழங்குவார்கள்,” என்றார் கிட்டத்தட்ட 20 ஆண்டுகள் தாதிமை இல்லத்தில் பணிபுரியும் அனுபவம் உள்ள தமிழ்செல்வி.

த.தேவானந்தன், 28, த.இளமாறன், 27, த.பிரியதர்ஷன், 26 ஆகிய மூன்று மகன்களுக்குத் தாயாக வீட்டில் சமையல், சுத்தம் செய்வது, மளிகைப் பொருட்கள் வாங்குவது என்று வீட்டு வேலைகளையும் பார்த்துகொள்வார்.

“வேலைக்குச் செல்லும்போது, நோய் தொற்றை குடும்பத்திற்கு எடுத்து வந்துவிடுவோமோ என்ற பயம் இருக்கும். ஆனால் சார்ஸ் காலத்தில் பணியாற்றிய அனுபவம் முறையாக எப்படி பணியாற்றுவது, பாதுகாத்துக்கொள்வது என்ற தெளிவைத் தந்துள்ளது,” என்றார் தமிழ்செல்வி.

ஆறு ஆண்டுகளுக்கு முன்னதாக கணவரைப் பிரிந்த அவர், மகன்களைப் பராமரிப்பதற்கு இரவும் பகலுமாக வேலை செய்வார்.

“தொடக்கத்தில் என் கணவரைப் பிரிந்தது எனக்கும் என் மகன்களுக்கும் பெரிய பாரமாக அமைந்தது. வாழ்க்கையில் நிலைபெற மிகவும் சிரமப்பட்டோம், மூவரும் அப்போது படித்துக் கொண்டிருந்தார்கள். படிப்பு, வீட்டு செலவு அத்தனையையும் சமாளிக்க இரண்டு வேலைகளை செய்யவேண்டியிருந்தது,” என்று துயரடன் நினைவுகூர்ந்தார் தமிழ்செல்வி. மகன்கள் சொந்தக் காலில் நிற்கத் தொடங்கிவிட்டதால் அண்மையில் இரவு வேலையை விட்டுவிட்டார். பகல்நேர வேலையில் கவனம் செலுத்துகிறார்.

“எனக்கும் என் சகோதரர்களுக்கு மட்டுமில்லாமல், அவர் சந்தித்த அனைவருக்கும் அவர் ஓர் உந்துசக்தி. எந்தச் சூழ்நிலையிலும், எவ்வளவு சவால்கள் இருந்தாலும் அதை பொறுமையுடனும் நிதானத்துடனும் கடைப்பிடிக்க வேண்டும் என்பதை அவரிடமிருந்து கற்றுக்கொண்டேன்,” என்றார் அவரது மூத்த மகன் திரு தேவானந்தன்.

நீ ஆன் பலதுறை கல்லூரியில் மேல்நிலை பட்டயப் படிப்பு, ஊழியர் அணி திறன் தேர்ச்சித் திட்டத்தின் சான்றிதழ் கல்வி என தொடர்ந்து தன் திறனை வளர்த்து வரும் தமிழ்செல்வி, தற்போது ‘ஸ்கில்ஸ்ஃபியூச்சர்’ திட்டத்தின் மூலம் திறன் பயிற்சிகளில் ஈடுபட்டு வருகிறார்.